# அரசனின் வாழ்க்கையில் ஆலய திருப்பணிகள்



தெட்சிணாமூர்த்தி சகாயம்

டி. என். எஸ். முருகதாஸ் தீர்த்தபதி
சிங்கம்பட்டி ராஜா

அரண்மனை
சிங்கம்பட்டி

நாள் : 12—3—1993

# அரசனின் வாழ்க்கையில் ஆலய திருப்பணிகள்

ஐயா,

நான் சிங்கம்பட்டி ஜமீன்தாரியின் முன்னாள் உரிமையாளர். இந்த ஜமீன்தாரி சுமார் 1000 வருடங்கள் பழமையானது. இது திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அமைந்துள்ளது. என்னுடைய இந்த ஜமீன்தாரி, 1948ன் சட்டம் 26ன் கீழ் அறிவிக்கப்பட்டு ரயத்துவாரி முறையாக மாற்றப்பட்டு 19—2—1952ல் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனது பாட்டனாருக்கு முன் என் தந்தையார் இறந்து, பாட்டனாரின் மறைவுக்குப் பின் வாரிசு பூர்வமான தலைப்பிள்ளை உரிமைப்படி என் தந்தைக்குப் பின் எனக்கு இந்த ஜமீன்தாரி வந்தது. அந்த நேரத்தில் 3½ வயதேயான நான் பிராயம் வராமல் அரசுரிமை பெற முடியாமல் இருந்ததால், அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் எஸ்டேட் நிர்வாகத்தை காப்பு சட்ட விதிகளின்படி எடுத்துக்கொண்டது. எங்களது ஆதிச் சொத்தான ஜமீனை 1948ம் ஆண்டு எண். 26ம் சட்டப்படி ஒழித்து தமிழக அரசு மேற்கொண்ட பின்பு, நான் எனது எஞ்சிய சொத்துக்களான, பண்ணை, சொந்தம் மற்றும் அறக்கட்டளைச் சொத்துக்களை 29—9—1952ல், 21 வயது பூர்த்தியான பின் அப்போது சமஸ்தானத்தை நிர்வகித்து வந்த சேரன்மகாதேவி கோட்டாட்சித் தலைவரிடமிருந்து பெற்று பொறுப்பு ஏற்றுக் கொண்டேன்.

அந்தக் குடும்பத்தில் பிறந்ததால் பரம்பரை பரம்பரையாக எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு சொரிமுத்தையனார் கோவிலுக்கும் மற்றும் தேவஸ்தானத்தைச் சார்ந்த கோவில்களுக்கும் பரம்பரை டிரஸ்டியாகப் பொறுப்பேற்றேன். அது முதல் எனக்குப் பல கடுமையான பிரச்சனைகள் ஏற்பட்டன. அனுபவமில்லாத இளைஞனாக இருந்ததால் ரெவின்யூ

V2;1197.C,93 (X72;3) N48
216460,

நிர்வாகத்தின் போக்கு பற்றி புரிந்து கொள்ள முடியாமல் அவதியுற்றேன். அதற்கு முக்கிய காரணம் ஜமீன் ஒழிப்புச் சட்டமே ஆகும்.

அதுவரை டிரஸ்டியாக இருந்த எனது பாட்டனாரால் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான பல நஞ்சை நிலங்களைப் பலருக்குக் கிரயம் செய்திருக்கிறார்கள். அதற்கான காரணம் அவர்களுக்குத்தான் தெரியும். நான் மைனராக இருந்தபொழுது கூட குடிவார உரிமை கோரி திருக்கோவில் நிலங்களை வாங்கியவர்கள் ஜமீன் ஆவணங்களில் தங்களை நில உரிமையாளராக பதிவு செய்ய (கோர்ட் ஆப் வார்ட்ஸ்) காப்பளார் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தார்கள். மேல்வார உரிமை ஜமீனுக்கு இருந்ததால் இந்த நபர்களுக்குச் சாதகமாக குடிவார உரிமை வழங்கப்படவில்லை. மேலாக, குழந்தைகளுக்கான கோர்ட் (காப்பளார் நீதிமன்றம்) இந்த குடியானவர்கள் குரலைக் கேட்டு சும்மா இருந்துவிடவில்லை. எனவே அவர்கள் சென்னையில் உள்ள தலைமை வழக்குரைஞரிடம் அபிப்பிராயம் கேட்டனர். அவருடைய கருத்து முற்றிலும் நமக்கு எதிரிடையாக இருந்தது. அதை முழுமையாக வாசிக்க முடியாமல் போய்விட்டாலும் நான் தீவிரமாக நம்புவது என்னவென்றால் தலைமை வழக்குரைஞர் அவர்களுக்கு சரியான புள்ளி விபரங்கள் அந்நேரம் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் நாங்கள் அதற்குப் பின் அனைத்து விபரங்களையும் எங்கள் காலத்தில் நீதிமன்றத்தில் கொடுத்து அனைத்து சிவில் வழக்குகளிலும் வெற்றி பெற்றிருக்கிறோம். அதுவரை எவ்வளவோ முயற்சி செய்தும் கடைசி வரை தேவஸ்தான குத்தகைதாரர்கள் கோவிலுக்கு செலுத்த வேண்டிய பாட்டத்தை செலுத்த மறுத்து விட்டார்கள்.

கோவிலுக்குள்ள பாட்டத்தை வசூல் செய்ய ஒரு சிறு வழக்கு (ஸ்மால் காஸ்) பதிவு செய்யப்பட்டால் எதிரிகளின் மறுப்புகள் சொத்தின் உரிமை பற்றிய பிரச்சனைகள் எழுந்த காரணமாக இந்த வழக்கு அசல் வழக்காக மாறிவிடும். காலக் கட்டத்தில் இந்த கோயிலுக்கு எதிரான வழக்குகளின் எண்ணிக்கை முந்நூறுக்கும் மேலானது. எனவே பணச்சிக்கல் அதிகம். இந்த அப்பாவி தனி குடியானவர்களை ஆட்டுவித்தவர்கள் இங்கு இருக்கும் ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனம். இந்த கோவில் நிலங்களின் தாவாவில் உள்பட்ட நிலம் ஒன்றை வம்புக்கென்று வாங்கி வைத்துக் கொண்டு இந்த விவசாயிகளை

வழிநடத்தி அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தனர். உண்மையில் அவர்கள் நீதிமன்றத்திலேயே நம் திருக்கோவில்களை மூடிவிடுவதாக சூளுரைத்தனர்.

கோவில் நிர்வாகத்திற்கு சாதகமாக இருந்த குறிப்புகளை வரிசையாகக் கீழே தருகிறேன்.

1. என் பாட்டனாருக்கு முந்தைய ஜமீன்தார்களும் மற்றும் அவர்களுக்கு முன்னால் சதிரங்க சேனைகளுடன் பாளையகாரர் என்ற அந்தஸ்துடன் வாழ்ந்தவர்களும் ஒவ்வொரு கோயிலுக்கும் சொந்தமான இடங்களுக்கு அந்தந்த ஸ்வாமி பெயர்களிலேயே ரயத்துவாரி பட்டாக்களை வழங்குவதில் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். இதை, அந்தந்த கோவில் ஸ்வாமிகள் பேரிலேயே பட்டாக்களை வழங்கி ஸ்வாமிகளையே நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கியிருக்கிறார்கள். எனவே பின்வந்த ராஜாக்கள் கோவில் சொத்துக்களை வேறொருவருக்கு மாற்றுவது அல்லது விற்பது என்பது அல்ட்ராவயர்ஸ் (அதிகார வரம்புகடந்த) செயலென்றும் சட்ட விதிகளுக்குப் புறம்பானது என்றும் கருத வேண்டும்.

2. அந்த மாதிரி சில இடங்கள் ஜமீன்தாரி முறைக்கு மாறுவதற்கு முன்பே பாளையமாக இருந்தபோதே கோவில்களுக்கு அளிக்கப்பட்டனவாகும். அதாவது 1802க்கு முன் தனக்கென சொந்தமாக படைகள் போன்றவை கொண்ட பாளையம் என்ற ஸ்தானத்தை வகித்த காலத் தொடக்க முதல் இக்கோவில்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால், ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலங்கள் இனாம் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் கோவில் நிர்வாகம் அந்தந்த நிலங்களுக்கு தலைப்பு ஒப்பாவனம் உரிமையாகப் பெற்றுள்ளதால் இங்கேயும் உரிமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிரிகளுக்கு மாற்ற முடியாது போயிற்று.

3. பல வருடங்களாக சிவில் வழக்குகளில் இந்த நபர்கள் ஈடுபட்டிருந்ததால் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரியை ஒருபோதும் செலுத்த முயற்சிக்கவில்லை. வருடா வருடம் கோயில் நிர்வாகத்தினால் அது செலுத்தப்பட்டு வந்தது.

4. ஜமீன்தாருக்கு எஸ்டேட் நில சட்டப்படி தனது பண்ணை நிலங்களுக்குக்கூட பட்டா கொடுக்க உரிமை இருந்திருக்கிறது. இது நிலத்தின் இயற்கையையோ, குணத்

தையோ மாற்றாது. இந்த பட்டாவைப் பெறுபவர் ராஜாவுக்கு பாட்டம் செலுத்தவேண்டும். இராஜா சமஸ்தானத்திற்கு கிஸ்தி கொடுக்கவேண்டும். இதையும் மேற்கோள் காட்டி கோர்ட்டில் எங்களுக்குச் சாதகமாக உருவாக்கிக் கொள்ள முடிந்தது.

இந்த வழக்குகள் அனைத்தும் துல்லியமாக நடத்தப்பட்டு கோவில் நிர்வாகத்தால் வெற்றி பெறப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் நிர்வாக அதிகாரி யாரும் பணியில் அமர்த்தப் படாததால் நான் சுயமாக இந்த நிறுவனத்தை நிர்வகித்து வந்தேன். அது சுமார் 1962ம் வருடம் எனது தொழில் அபிவிருத்தி கருதியும், பிள்ளைகளின் படிப்பிற்காகவும் நான் மதுரைக்கும், பின்னர் அங்கிருந்து சென்னைக்கும் சென்ற பொழுது நிர்வாக அதிகாரி கேட்டு விண்ணப்பம் செய்தேன். கடந்த 10—7—92ல் காலமான தி. அரிகரசுப்பிரமணிய பட்டர் என்பவர் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு வழக்குகளை நடத்தி வந்தார். அப்போது சிவில் வழக்குகள் பற்றி எனக்கு அதிகம் அனுபோகம் இல்லை. இதனால் அவருக்கு பல அவமானங் களும், கடைசியாக கொலை மிரட்டல்களும் பலமுறை ஏற்பட்டன. தைரியமாக அவற்தை எதிர்கொண்டு எங்களை வெற்றிக்கு வழி நடத்தினார். அவரது அயராத உழைப்புக்கு, கோயில் நிர்வாகம் எந்நாளும் நன்றியுடையதாய் இருக்க வேண்டும். துருப்புச் சீட்டாக இந்த கிறிஸ்தவ நிறுவனம் தலைமை வழக்குரைஞரின் கருத்தை வாங்கி தனக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள திரு தி. அரிகரசுப்ரமணிய பட்டருக்கு ரூ. 35,000/- தருவதாக ஆசை காட்டினர். இன்றைய மதிப்பில் அத்தொகை சுமார் 25 மடங்காகும் அவர் மாநில அரசுத் தலமை வழக்குரைஞர் கொடுத்த அபிப்பிராயத்தை என்னிடம் காட்டாமலும், தராமலும் பாதுகாத்து அவற்றை அழித்து விட்டார். இதுதான் அவர் நம் கோவிலுக்கு காட்டிய விசுவாசம்.

29-9-52 அன்று சேரன்மகாதேவி சப் கலெக்டர் என்னிடம் மீதமுள்ள எஸ்டேட்டை ஒப்புவித்தார். (ஜெனரல் கரியப்பாவின் சகோதரர் பையன் திரு. எம். பி. கரியப்பா) அதற்கு முன் நம் ஜமீனுக்கு அதாவது ஜமீன் ஒழிப்பிற்கு முன் மேற்கு தொடர்ச்சி மலையில் சுமார் 74 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு சொந்தமாக இருந்தது குறிப்பிடத் தகுந்தது. சேரன்மகாதேவி உதவி கலெக்டர் பொறுப்புகளை என்னிடம் ஒப்புவிக்கும் போது

கோவிலுக்கு சொந்தமான நகைகளை திரு. தி. அரிகரசுப்ரமணிய பட்டரிடம் நான் பத்திரமாக ஒப்படைத்தேன். அப்போது நான் அவைகளை கண் எடுத்துக்கூட பார்க்கவில்லை. எனது விண்ணப்பத்தின் பேரில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் எண். 3140/61, நாள் 8—9—61ன் படி நிர்வாக அதிகாரி பணியில் அமர்த்தப்பட்டார். மேற்படி ஆணையின் கீழ் எனது மற்றும் நிர்வாக அதிகாரி இருவருக்கும் அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி பரம்பரை அறங்காவலர் கோவில் நகைகளை வைத்துக் கொள்ள வேண்டும். நான் பொறுப்பாக இருந்தாலும் அது திரு. அரிகர சுப்ரமணிய பட்டரது வசம் இருந்திருக்கிறது. 10—7—92 அன்று அவரது திடீர் மறைவிற்கு பின் வருத்தமான சூழ்நிலையில் நான் அவைகளை பொறுப்பேற்றுக் கொண்டேன். அப்போது எல்லா நகைகளும் ஒரு குறையும் இல்லாமல் சரியாகவே இருந்தன. நான் முன்னாள் ஆட்சியாளராக இருந்ததால் பல வேலைகள், மற்றும் கடமைகளுக்கு இடையே வாழவேண்டியிருப்பதால் திருவிழா காலங்களில் நகைகளை அவ்வப்போது பொறுப்பாக எடுக்கவும் ஸ்வாமிகளுக்கு அணிவிக்கவும் என்னால் முடியவில்லை. எனவே நான் அந்தப் பொறுப்பை திரு எஸ். அருணாசலம் செட்டியார், எனது பள்ளியில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், தேசீய விருது பெற்ற நல்லாசிரியர் வசம் ஒப்படைத்தேன். அவர் எங்களது சமஸ்தானத்திற்கு மிகவும் விசுவாசமானவர்- மிகச் சிறந்த நடத்தை உள்ளவர். நான், அந்த நகைகளுக்கு பொறுப்பாக இருந்தாலும் அவருக்கு மாதம் ரூ. 300/- அல்லது 400/- கோவில் நிர்வாகத்திலிருந்து மதிப்பூதியமாக வழங்க ஆணையாளரது மேலான உத்தரவை வேண்டுகிறேன்.

காலஞ் சென்ற திரு. தி. அரிகரசுப்ரமணிய பட்டர் சிறந்த முருகபக்தர். அவரது குலதெய்வமும்கூட. கடந்த 40 ஆண்டுகளில் முருகனிடம் தொடர்பு கொண்டு என்னிடம் கூறிய பல விஷயங்கள் இதுவரை உண்மையாக நிறைவேறியுள்ளது. 1951லேயே கூட எனது இறப்பைப் பற்றிக் கூறிய விஷயத்தை நான் இப்போது கூறினால் பெருத்த ஆச்சரியமடைவீர்கள்.

இந்த கடிதத்தின் சுருக்கமாக நான் 40 வருடமாக பரம்பரை அறங்காவலராக பணி செய்த பின்வரும் விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

1. மற்ற கோவில்களோடு சேர்த்து எனது நிர்வாகத்தில் உள்ள ஒன்பது கோவில்களுக்கும் குடமுழுக்கு செய்வித்திருக்கிறேன்.

2 ஏறத்தாழ 25 லட்ச ரூபாய் அளவு செலவில் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

3. கோயில் நிர்வாகத்தில் சுமார் 1101 பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிருக்கிறேன்-

4. என்னுடைய சொந்த பணத்தில் சுமார் 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவழித்து தமிழக பொதுப் பணித்துறையுடன் 19 வருடங்களாகப் போராடி மணிமுத்தாறு அணையின் உள்ளே நீர் பரப்பளவிற்கு மேல் பகுதியில் சுமார் $5\frac{1}{2}$ லட்சம் செலவில் ஒரு கால்வாய் வெட்டினேன். ஆரம்பத்தில் இதை நடைமுறைக்கு சாத்தியப்படாத திட்டம் என்றும், தேவையில்லாது ராஜா போராடுகிறார் என்று கூறப்பட்டாலும் நான் வலியுறுத்தியே வந்துள்ளேன். தற்போது அது நிறைவேறிய பின் இதனால் ஆறுவடிகால் குளங்கள் பலனடைந்துள்ளன. இதனால் கோயிலுக்கு வருடந்தோறும் சுமார் 300 மூடை நெல் கிடைக்கிறது.

5. இதற்கும் மேல், ஊரில் உள்ள விவசாயிகள் கோவிலுக்கு தரும் குத்தகை நெல் சுமார் 1300 மூடை நெல் இன்றும் நான் வருடந்தோறும் வசூல் செய்து வருகிறேன்.

ஸ்வாமி ஐயப்பன் சேவையில்
தங்கள் பணியாளன்,

தெ. ந. சி. முருகதாஸ்,
தீர்த்தபதி
குறுநில மன்னர்.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி—6